
# உதயன்

சுடர் : 37
கதிர் : 332
திங்கட்கிழமை
24 ஒக்ரோபர் 2022
ஐப்பசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

வாடிக்கையாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள், அபிமானிகள் அனைவருக்கும் அன்புரிமையுடன் உதயனின் உளங்கனிந்த தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வு நிச்சயம்



## ஓராண்டுக்குள் நடக்கும் என்கிறார் ஜனாதிபதி ரணில்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24**

**தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே எனது நோக்கம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

15

# மாதகலில் 100 கிலோ கஞ்சா பிடிபட்டது நேற்று

யாழ்ப்பாணம், ஒக். 24

மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது 100 கிலோ கஞ்சாவும் அதனைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட படகும் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பாதுகாப்பு படைத் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

புதிய அரசமைப்பில்

# இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கடவுள்களை வேண்டுகின்றேன்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஒக். 24

தமிழர்களின் வாழ்வில் அமைதி ஏற்பட்டு மக்கள் முன்னேற்றகரமாக வாழக்கூடிய வகையில் இலங்கையில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமென இன்றைய நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அந்தப் புதிய அரசமைப்பின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றோம்-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன்றைய தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையில், அனைவருக்கும் எனது அன்பான இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

15

# போதைக்கு அடிமையானவர் புத்தூரில் நேற்று உயிர்மாய்ப்பு

## மாதம் ஒருவர் வீதம் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 24

உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான இளைஞர் ஒருவர், தவறான முடிவு எடுத்து நேற்று உயிரிழந்துள்ளார். மருதடி - புத்தூர் மேற்கைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்வியில் திறமையாகத் திகழ்ந்த இவர், உயர்தரத்துக்குத் தெரிவான பின்னர் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியிலுள்ள பாடசாலையில் இணைந்துள்ளார். அங்கு உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகியுள்ளார். அதன் பின்னர் வீட்டிலுள்ள பொருள்களைத் திருடுவது உள்ளிட்ட குற்றங்களிலும் ஈடுபட்டாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை சான்றுபெற்ற சிறுவர் பாடசாலையிலும் இளைஞன் தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.

15

## அவுஸ்திரேலிய கனவுடன் காத்திருந்த

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 43 பேர் நேற்றுக் கைது!

கொழும்பு, ஒக். 24

இரண்டு பெண்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த 43பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழேயே இவர்கள் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

காலி மாவட்டத்தின் உனவட்டுன பிரதேசத்திலுள்ள ஹோட்டலில் தங்கியிருந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ-ஓ-இ)

# போதைப்பொருள் கடத்தலைக் கைவிடுக!

## யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் மன்றாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24

உயிர்கொல்லி போதைப்பொருளைக் கடத்துவர்களும் அதற்கு அடிமையானவர்களும் அந்தத் தீய செயற்பாட்டிலிருந்து விலகவேண்டுமென்று மன்றாட்டமாகக் கோருவதாக யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

# உயிர்கொல்லி போதைப்பொருளை கட்டுப்படுத்த விசேட படைப்பிரிவு

## யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் சோதனைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் இதற்காக விசேட படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், யாழ். மாவட்ட பாதுகாப்பு படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்;

இந்தியாவிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு அதிகளவான உயிர்கொல்லி போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளஞ் சந்ததியினரும் அவற்றுக்கு அடிமையாகின்ற தன்மையானது

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பையும் உருவாக்கியே தீருவோம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 24**

**'நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியதுபோல் புதிய அரசமைப்பையும் கொண்டுவந்தே தீருவோம் -இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

'22ஆவது திருத்தச் சட்டத்தைத் தோற்கடிக்க ஆளும் தரப்புக்குள்ளும் எதிரணிப் தரப்புக்குள்ளும் இருந்து சிலர் சதித்திட்டங்களைத் தீட்டினர். இதற்கு வெளியில் இருந்த ஒரு பெரிய புள்ளி தலைமை தாங்கினார்.

ஆனால், இறுதியில் அனைத்துச் சதித்திட்டங்களும் படுதோல்வியில் முடிவடைந்தன.

22ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக 179 பேர் வாக்களித்தமை பெரிய விடயம். அதுவும் ஐக்கிய மக்கள் சக்தி ஒரே அணியில் நின்று இந்தத் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளமை போற்றத்தக்கது.

22ஆவது திருத்தத்துக்கு வெற்றி உறுதி என்பதை ஊகித்துக் கொண்ட சதிகாரக் கும்பலைச் சேர்ந்த சிலர் வாக்கெடுப்புக்கு முன்னரே சபையிலிருந்து வெளியேறிவிட்டார்கள்.

இது அவர்களுக்குக் கிடைத்த பேரவமானமாகும்.

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியதுபோல் புதிய அரசமைப்பையும் கொண்டுவந்தே தீருவோம்' - என்றார். (ம-22)

## வீடொன்றில் வாள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 24

இணுவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வாள் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே மேற்படி வாள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தலைமறைவு ஆகியுள்ள நிலையில் இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)

### சாவகச்சேரியில்

## எரிவாயு அடுப்பொன்று வெடித்துச் சிதறியது!

யாழ்ப்பாணம், ஒக். 24

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் நண்பகல் எரிவாயு அடுப்பொன்று வெடித்துச் சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளது.

சமையல் செய்துகொண்டிருந்தபோதே குறித்த அடுப்பு வெடித்துச் சிதறியது என்றும், எனினும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-27)

## கசிப்புக் காய்ச்சிய இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பொக்கணைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சும் இடமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் இருந்து 200 லீற்றர் கோடா, 60 லீற்றர் ஸ்பிரிட் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-27)

### ஆனந்தபுரம் பகுதியில்

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 24

கோப்பாய் - ஆனந்தபுரம் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 100 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான நபர் 25 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-20-26)

## கத்தியைக் காட்டி பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஒக். 24

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆவரங்கால் - வன்னியசிங்கம் வீதியில் தனிமையில் பயணித்த நபரொருவரிடம் நேற்றுமுன்தினம் கத்திமுனையில் சுமார் 15 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

முகமூடி அணிந்துவந்த சில நபர்களே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-20)

## பலவீனத்தை உணர்ந்து விடைபெறட்டும் மஹிந்த

### சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 24

உடல் பலமும், மனவலிமையும் குறைந்துள்ளதை மஹிந்த ராஜபக்ச உணர்ந்து, மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெறவேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ராஜபக்சக்களின் அடிமையாக வாழ்ந்த வாழ்க்கையை விட்டொழிக்க மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜபக்சவினர் இன்னும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர். அவ்வாறான நிலைமை ஏற்பட இடமளிக்காமல் பாதுகாப்பது மக்களின் பொறுப்பு.

ராஜபக்சவினர் தமது குடும்பத்தில் ஒருவரை மீண்டும் ஜனாதிபதியாக்க முயல்கின்றனர். இது மீண்டும் நாட்டை அழிப்பதற்கான முயற்சியாகும்.

எந்த மனிதராலும் எந்தத் தொழிலையும் செய்ய முடியாத காலம் வரும். உடல் பலமும், மனவலிமையும் குறைந்துள்ளதை மஹிந்த ராஜபக்ச உணர்ந்து, மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெறவேண்டும். அதிகார மோகம் என்னிடம் இல்லை' - என்றார். (ம-22)

# மண்ணெண்ணெய் வழங்குமாறு யாழில் மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24

மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளை தடையின்றி வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். காக்கைதீவு, சாவல்கட்டு மீனவர்களே -இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்ததாவது:-

நாட்டில் எரிபொருள் வழங்கல் முறையை சீர்குலைந்ததால் மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடி நடவடிக்கைக்குத் தேவையான மண்ணெண்ணெய் இன்னமும் திருப்தியாக வழங்கப்பட்டபாடில்லை. வாராவாரம் சில இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்ற போதிலும் இந்த வழங்கல் மீனவர்களின் தேவையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதே.

காக்கைதீவு துறைமுகத்தில் 225 படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. தற்போது ஒரு படகுக்கு மாதம் ஒன்றுக்கு 30 லீற்றர் மண்ணெண்ணெயே வழங்கப்படுகிறது. எமக்கு ஒரு நாள் பாவனைக்கே 50 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது.

இந்த நிலையில் இந்த 30 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு மாதத்துக்கு எந்தவிதம் போதும்?

இந்த மண்ணெண்ணெய்ப் பிரச்சினை காரணமாக 225 படகுகளில் 10 படகுகள் மாத்திரமே அன்றாடம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

தற்போது மீன்பிடிக்கான பருவகாலம் நடந்துகொண்டிருக்கிறது. மீன்பிடி பருவகாலத்தில் ஆறு மாதங்கள் மாத்திரமே நாங்கள்



திருப்திகரமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடலாம். நாங்கள் தொழில் செய்து உழைக்கின்ற இந்த காலப்பகுதியில் எமக்கு மண்ணெண்ணெயை சீராக வழங்காவிட்டால் நாங்கள் எவ்வாறு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது? அரசியல்வாதிகள் தங்களது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளவும் அரசியல் இலாபங்களுக்காகவும் அடிபடுகின்றார்களே தவிர, எங்களது பிரச்சினைகளுக்கு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை - என்றனர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அடுத்த தீபாவளிக்கு முன்னதாக....!

இன்று தீபாவளி. ஒளியின் பண்டிகை. பூமியைப் பீடித்திருந்த நரகாசுரன் என்னும் இருளை விஷ்ணுபகவான் அழித்து, எங்கும் மகிழ்வின் ஒளியை நிரந்தரமாக்கிய நாளே தீபாவளிப் பண்டிகை என்கிறது இந்துமதம். தமிழர்களின் மிகமுக்கியமான பண்டிகைகளில் ஒன்றான இந்தத் தீபாவளியை இம்முறையும் குதூகலமாகக் கொண்டாட முடியாத நிலையே இலங்கையில் நீடிக்கின்றது. ஏனெனில் நாடெங்கும் பொருளாதார நெருக்கடி, போதைப்பாவனை, குற்றச்சம்பவங்களின் பெருக்கம் என்ற பொதுவான இலங்கைக்கேயுரித்தான பிரச்சினைகளோடு, பல தசாப்தங்களாக தமிழர்களின் பிரச்சினைகளாக நீள்கின்ற சிங்கள பௌத்த நில விழுங்கல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் என்பன கொண்டாட்ட மனநிலையை இல்லாமலே செய்திருக்கின்றன.

கடந்தகாலங்களில், 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு' என்னும் தேர்தல் பட்டாசுகள் புஷ்வாணமானதால், எந்தத் தீபாவளிக்கும் தமக்கு ஒரு விடியல் வரவே வராது என்று தமிழ் மக்கள் மனம் வெறுத்திருந்தார்கள். ஆனாலும் இந்தமுறை ஒரு சிறு ஒளிக்கீற்று தென்படவே செய்துள்ளது. குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள் எட்டுப்பேர் தீபாவளியை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கும் செய்தி கொஞ்சம் ஆறுதலைத் தருவதாகவே உள்ளது. வழக்கமாக 'தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு' என்ற லேபலில் சிறு குற்றங்கள் புரிந்தவர்களும், மிக அண்மைக்காலத்தில் சமூக வலைத்தளத்தில் புலிகளுக்குச் சார்பான ஒளிப்படங்கள், கருத்துக்கள் என்பவற்றைப் பதிவேற்றியோருமே விடுவிக்கப்பட்டிருந்தனர். உண்மையில், அவர்கள் நீதிமன்றால் விடுவிக்கப்படும் நிலையிலேயே, அவர்களை கருணைகொண்டு தாம் விடுதலை செய்வது போல அரசாங்கங்கள் காட்டிக் கொண்டிருந்தன. ஆனால் உண்மையிலேயே இந்தமுறைதான் நீதிமன்றால் 200 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர் கூட விடுவிக்கப்படுமளவுக்கு அர்த்தமுள்ள அரசியல்கைதிகளின் விடுவிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

சிறைவாழ்வு என்பது ஏறக்குறைய நரகவாழ்வுதான். இந்த நரகவாழ்வுக்குள், தமக்கான விடுதலை எப்போது எனத் தெரியாமல் ஒவ்வொருநாளும் இருளுக்குள்ளேயே மூழ்கியிருப்பதைவிடக் கொடுமையான தண்டனை வேறேதும் கிடையாது. மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் கூட, இரு சிலவருடங்களில் ஜனாதிபதிகளின் கடைக்கண் பார்வையால், விடுதலை பெற்றுக்கொண்டிருக்கும்போது, செய்யாத குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு, பல தசாப்தங்களாக சிறைப்பறவைகளாக வாடிக்கொண்டிருப்பதும், சிறைக்கூடத்துக்குள்ளேயே தமது இளமைக்காலத்தை தொலைப்பதும் தமிழ் இளைஞர்களின் தலைவிதியாக மாறியிருந்தது. தமிழ் அரசியல் கைதிகளை விசாரணை செய்து, அவர்களுக்குரிய தண்டனையை வழங்கிவிட்டாவது விடுதலை செய்யுங்கள் என்றும் பல போராட்டங்கள் சிறைக்குள்ளும், வெளியிலும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், எந்தப் பயனுமில்லை. விசாரணையுமின்றி, விடுதலையுமின்றி அவர்கள் தொடர்ந்தும் தடுத்தே வைக்கப்பட்டனர். இப்போது அரசியல் கைதிகளாக இருப்போருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டாலும் கூட அவர்கள் அடுத்தநாளே வெளியில் வந்துவிட முடியும். ஏனெனில் ஆயுள் தண்டனைக்காலத்தை விடவும் அதிக காலம் அவர்கள் சிறைக்குள்தான் இருக்கின்றார்கள். இப்படியொரு நிலையில்தான், கடந்த கால அரசாங்கங்களைப் போலன்றி இந்தமுறை கொஞ்சம் ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக எட்டு அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் முழுதாக விடுவிக்கப்பட்ட நிலையில், எஞ்சிய நால்வரும் சில நீதிமன்ற நடவடிக்கைகளை பூர்த்தி செய்யவேண்டியிருப்பதால், அவர்கள் வீடு திரும்ப சிலநாள்கள் எடுக்கும்.

இந்த எட்டுப்பேர் வீட்டிலும் இந்தமுறை தீபாவளியைக் கொண்டாட வைத்தது போன்று, அடுத்த தீபாவளிக்கு முன்னதாக ஏனைய அரசியல் கைதிகளையும், அரசாங்கம் விடுவித்து அவர்களின் வீடுகளிலும் உறைந்திருக்கும் இருளை அகற்றி ஒளியை ஏற்றவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து, அரசியல் கைதிகள் என்ற எவருமே சிறைகளில் இல்லை என்று உலகநாடுகளிடம் பெருமையோடு சொல்ல அரசாங்கம் ஆவன செய்யுமா?

### நாளொரு நல்வார்த்தை

"உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி" - சுவாமி விவேகானந்தர்




### மக்களுக்காக முன்னின்ற

# சுயாதீனத் தலைவர்களை பதவிநீக்குவதற்கு முயற்சி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 24**

**கடந்த காலங்களில் மக்களுக்காக முன்னின்ற மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுக்களின் சுயாதீன தலைவர்களைப் பதவிநீக்கம் செய்ய முயற்சி நடக்கின்றது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் திவுலபிட்டிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

22ஆவது திருத்தத்தை ஆதரித்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்திருந்த 21ஆவது திருத்தமே நாட்டுக்குச் சிறந்தது. அப்படியொரு நல்ல விடயம் இருந்தும் 22 ஆவது திருத்தத்தைக் கோத்தாபயவின் சர்வாதிகாரத்தை தோற்கடிப்பதற்காகவே ஆதரித்தோம். கடந்த காலங்களில் மக்களுக்காக முன்னின்ற மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுக்களின் சுயாதீன தலைவர்களைப் பதவிநீக்கம் செய்ய முயற்சி நடக்கின்றது. இவ்வாறு அரச அதிகாரத்தைத் தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்து, கடுமையான நடவடிக்கைகளை எடுக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம்.

எப்போதும் மக்களுக்காகவே முன்னின்ற தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோரின் சுயாதீனத்துக்காக ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் முன்னிற்கும். அந்தத் தலைவர்களின் கடமைகளில் தலையிடாமல் முடிந்தால் தேர்தலை உடன் நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுகின்றோம்.

நல்லாட்சிக்காகவே 22 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தோமேயன்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் திருமதி ரோஹினி மாரசிங்கவையோ அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவாவையோ வீட்டுக்கு அனுப்புவதற்காக அல்ல. இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அவ்வாறு அரசு செயற்படமுற்பட்டால் எந்நேரத்திலும் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்குவோம்" - என்றார். (ம-22)

## தங்கம் கடத்தல் அதிகரிப்பு; தடுக்கும் செயற்பாடு தீவிரம்

### சுங்கத்துறை தெரிவிப்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்தப்படுவது அதிகரித்துள்ளது என சுங்கத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் 8 தங்கக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. தங்கத்தின் விலையும் அதற்கான தேவையும் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடத்தல்காரர்களில் சிலர், இலங்கைக்குள் தங்கத்தைக் கடத்தி வந்தபின் அதனை உருக்கி தங்க பிஸ்கட்டுகளாக மாற்றிவிடுகின்றனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)


**நாளை** 25.10.2022 செவ்வாய்க்கிழமை ஐப்பசி 8

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32

கேதாரகௌரி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



மலர்வு
24.10.1972

உதிர்வு
06.09.1996

## அமரர்
## இரத்தினம் ஜெயன்

(யாழ். பல்கலைக்கழக வணிக பீட மாணவன்)

அமைதியின் உருவமாய் அடக்கத்தின் இருப்பிடமாய்
பண்பின் பெருந்தகையாய் பாசத்தின் உறைவிடமாய்
கல்வியின் சிகரமாய் எமதன்பின் முத்தாய்
இருந்த எம் குலவிளக்கே!

தவமாய் தவமிருந்து உன்னை பெற்ற
தாயைத்தேடி ஏன் விரைந்தாய்?
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உன் வதன முகம்
எந்நாளும் உயிர்வாழும்
காந்தமாய் எமையீர்த்த உன்னை
காலன் கவர்ந்து சென்றதேனோ?

இன்று உனக்கு அகவை ஐம்பது
பூக்காதோ மீண்டும் உந்தன்
வாழ்வு என்று ஏங்குகின்றோம்
கண்ணீர் பூக்களால் உன்னை வாழ்த்துகின்றோம்.


கைதடி மேற்கு,
கைதடி.

என்றும் ஆறாத்துயரில்
குடும்பத்தினர்

(CS 21345) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 09 . 1968



இறப்பு 22 . 10 . 2022

## இராசையா மகேந்திரன் (இந்திரன்)

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேந்திரன் (இந்திரன்) நேற்றுமுன்தினம் (22.10.2022) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் இளைய மகனும், சுப்பிரமணியம் சந்திராதேவி (இந்திரா - முள்ளியவளை) தம்பதியரின் மருமகனும், பொற்செல்வியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், சபிணா, சகிஷன், சதுர்ஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணாம்பாள் (இணுவில்), ரகுநாதன் (சிவா - ஜேர்மனி), திருநாவுக்கரசு (ரவி - சுவிஸ்), சசிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம் (சோதிலிங்கம் - அபிராமி பெசன் ஹவுஸ் - சுன்னாகம்), உலகேஸ்வரி (கலா - ஜேர்மனி), அமிர்தகௌரி (சுவிஸ்), சிவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இணுவில் கிழக்கு,
காரைக்கால் சிவன் கோயிலடி,
இணுவில்.
தொடர்பு: 021 224 2064

தகவல்
சோதிலிங்கம் (அத்தான்)
(அபிராமி பெசன் ஹவுஸ் சுன்னாகம்)
அக்கா (கிருஷ்ணாம்பாள்)

(cs.47256) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 01 . 1933



மறைவு 20 . 10 . 2022

## திரு. வைத்திலிங்கம் சோமசுந்தரம்

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சோமசுந்தரம் அவர்கள் (20.10.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தியாகராசா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகம்மா, சின்னத்துரை, சுப்பிரமணியம் மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சியாமினி, பிரதீபன், துசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலா தனவேந்தன் அவர்களின் வளர்ப்புத் தந்தையும், நாதன் சிறீதரன், சர்மிளா, கிருபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமநாதன், கயிலநாதன், புஸ்பநாதன், சாம்பசிவம், திருச்செல்வம், மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவானி, கேசன், Shaan, Eashaa, கிருஸ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 2.00 மணிமுதல் பி.ப 06.00 மணிவரை Jayaratna Parlor எனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து 26.10.2022 புதன்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(cs.472255) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினரால் உதவி உண்டாகும்.

**இடபம்:** பகைவர் தொல்லை அகலும். வியாபாரத்தில் இருந்த பிரச்சினையை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தடைகளை சரி செய்து வெற்றி அடைவீர்கள் உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்:** குழப்பத்துக்கு இடமளிக்காதீர். திட்டமிட்ட செயல்கள் வெற்றியாகும். வேலைப்பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். நிதிநிலை உயரும்.

**கன்னி:** பணத் தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சி இழுபறியாகும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமல் போகும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். செல்வாக்கு உயரும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**தனுசு:** திட்டமிட்டு செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு உயரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**மகரம்:** செயல்களில் நெருக்கடி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமல் போகும். சந்திராஷ்டமம் இருப்பதால் முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.

**மீனம்:** பணியில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். நெருக்கடி விலகும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள்.



# யாழ். மாவட்டத்தில் டெங்கு அதிதீவிரம்!

## கடந்த இருவாரத்தில் 22 பேர் அடையாளம்

**யாழ்ப்பாணம், ஒக். 24**

**யாழ். நகரப் பகுதிகளில் டெங்கின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது. கடந்த இருவாரத்தில் மாத்திரம் 22 பேர் டெங்குத் தொற்றாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 37 பேர் டெங்குத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும். இதனால் டெங்குத் தாக்கம் மேலும் தீவிரமடையும் அபாயமுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் மக்களும் தமது சுற்றாடலை மிகமிகத் தூய்மையாகப் பேணி இந்தப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்க வேண்டும். சுகாதாரப் பிரிவினர் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து தெளிவுபடுத்துவார்கள்.

அத்துடன், நுளம்பு பெருகக்கூடிய சூழலை அடையாளங்கண்டு அவற்றைத் துப்புரவு செய்யாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (ச-17)



# மூலோபாய திட்டத்தின் கீழ் 10 குடும்பங்களுக்கு ஆடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 24

சாவகச்சேரி பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் மூலோபாய உதவித் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10 குடும்பங்களுக்கு ஆடு வழங்கும் நிகழ்வும் பயிற்சி வகுப்பும் சாவகச்சேரி பிரதேச சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

மூலோபாய உதவித் திட்டத்தை மேம்படுத்துவதற்காக சாவகச்சேரி பிரதேசசபையின் கீழுள்ள 8 பெண் உறுப்பினர்களுக்கு கிடைக்கப் பெற்ற ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த உதவித்திட்டம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிதியில் தெரிவு செய்யப்பட்ட 32 குடும்பங்களுக்கு ஆடு வழங்கப்படவுள்ள நிலையில் அதில் முதற்கட்டமாக 10 குடும்பங்களுக்கு தற்போது ஆடு வழங்கப்பட்டது. (ச-159)

# யாழ். நகரப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சோதனை

## சுகாதாரப் பிரிவினர் அதிரடி

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கடந்தவாரம் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக டெங்கின் தாக்கம் யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது.

அந்தவகையில் நடப்பாண்டில் டெங்கின் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்ட நாவாந்துறையிலும் ஜே/87, கொழும்புத்துறை ஜே/62, வண்ணார்பண்ணை ஜே/02 ஆகிய பிரிவுகளிலுள்ள ஆயிரத்து 620 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 67 குடியிருப்பாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன், துப்புரவின்றிக் காணப்பட்ட 107 குடியிருப்புகள் இனங்காணப்பட்டு உடன் துப்புரவுக்குட்படுத்துமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கும் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச-17)



# வெள்ளை ஈ பரவலால் செவ்விளநீர் தட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 24

வெள்ளை ஈ பாதிப்பால் செவ்விளநீர் தென்னை மரங்கள் அதிகம் பாதிக்கப்படுவதால் எதிர் வரும் டிசெம்பர் மாதத்தில் நாட்டில் செவ் விளநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்டே செவ்விளநீர் பயிரிடப்படுகிறது. செவ்விளநீர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு, 95 லட்சம் செவ்விளநீர் ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த ஆண்டு வெள்ளை ஈ பாதிப்பு பரவி வருவதால், எதிர்காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதி பாதிக்கப்படலாம்.

இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந்தோப்புகள் வெள்ளை ஈ பாதிப்பால் சேதமடைந்துள்ளன என தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நயனி [illegible] துள்ளார். [illegible]

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்
உங்கள் அபிமான
பூரணி நகைமாடம்
தற்போது புதுப் பொலிவுடன்
இல.46, கஸ்தூரியார் வீதியில்
உங்கள்
நகை தேவைகளுக்கு
சிறந்த உத்தரவாதத்துடன்
நவீன டிசைன்களில்
தங்க ஆபரணங்களை
தெரிவு செய்திட
சிறந்த இடம்
021 222 3121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் புதிய ஒளி வரட்டும்

## முன்னாள் எம்.பி. சரவணபவன் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஒக். 24

ஒருபோதும் சோர்ந்து விடாது, அடுத்த கட்டத்தை எப்படியாவது வெற்றி கொள்ளவேண்டும் என்கின்ற ஓர்மத்துடன் நகரும் எங்கள் வாழ்க்கைக்கு இந்தத் தீபாவளி புதிய ஒளியைத் தரட்டும் - இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன்.



அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளும் அதனால் எழுந்துள்ள சவால்களுக்கும் மத்தியில்தான் நாம் ஒவ்வொருவரும் இந்தத் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். எமது பண்டிகைகள், கலாசாரங்கள், கொண்டாட்டங்களை நாம் எவ்வளவு நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் அதனை கொண்டாடத்தவறுவதில்லை. எம்மவர்களின் மனவுறுதிக்கும் முன்னேற்றத்துக்கும் இது தக்கசான்று.

எமது சமூகத்தை கருவறுப்பதற்காக எம்மைச் சூழ்ந்து நிற்கும் காரிருளான உயிர்கொல்லிப் போதைப்பொருள் என்ற அரக்கனை நாம் அழித்தொழிக்கவேண்டும்.

சமூக கூட்டுப் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்று அதனைச் செய்வோம். அந்தக் காரிருளை அகற்றி ஒளியைக் கொடுப்போம் -என்றுள்ளது. (ம)








# ஒளிமயமான நாட்டுக்காக தீபாவளியில் பிரார்த்திப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

தீமையைத் தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலைமையை தோற்கடித்து நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம் - இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

'வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும்' பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

இந்துக்கள் இந்தத் தினத்தில் எண்ணெய் வைத்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய தரிசனம் செய்வதுடன், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள். அத்துடன் பெரியோர்களை வணங்கி,பரிசுப் பொருள்கள் பரிமாறி, பட்டாசு கொளுத்தி, உறவினர்களுடன் இனிப்பான சிற்றுண்டிகள் உண்டு, உலகெங்கும் உள்ள இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையை வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

தீபாவளிப் பண்டிகையை உலகுக்கு இருளை அகற்றி வெளிச்சம் தரும் பண்டிகையாகவும், அறியாமையை நீக்கி ஞானத்தை அளிக்கும் பண்டிகையாகவும் இந்து மக்கள் கொண்டாடுகின்றனர். புராதன இதிகாசங்களில் குறிப்பிடப்பட்ட சமூக நல்லிணக்கம், குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றின் ஒருமித்த நாளாக தீபாவளி தினம் கொண்டாடப்படுகிறது.

மேலும் இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தையும், பரஸ்பர புரிந்துணர்வையும் உருவாக்க இந்த அற்புதமான நன்னாள் பெரும் பங்களிப்பை வழங்குகிறது. அனைவரினதும் வெறுப்பும் கோபமும் நீங்கி, மனித நல்லிணக்கம் நிறைந்த இலங்கையில் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ தீபத்திருநாள் அனைவருக்கும் உறுதுணையாக அமையட்டும்- என்றுள்ளது. (ம)

## தித்திக்கும் தீபாவளி

தீபாவளியும் வந்ததுவே
தீவினைகள் அகன்றிடவே
நரகாசுரன் மாண்டதினம்தான்
நானிலம் போற்றும் தீபநன்னாள்
நரகாசுரர்கள் மாண்டனரோ?
தொல்லைகள் எல்லாம் தீர்ந்தனவோ
தொடரும் துன்பம் மீளாதா?
ஏங்கும் இதயம் மகிழ்ந்திடவே
இறைவன் ஒருவன் அருள்தருவான்
என்றும் அசையா நம்பிக்கையோடு
தீபந்தன்னை ஏற்றி வைத்து
திருவிளக்கதனைத் தரிசிப்போம்
பகவான் நிச்சயம் அருள்தருவான்
பாரில் இனிதே வாழ்ந்திடுவோம்
அதர்மம் ஒருபோதும் நிலைக்காது
தத்துவத்தை உணர்த்துவதே தீபாவளி

த.நாராயணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARL SMART WATER SOLUTION

"Smart Water, Smart Life"

நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வாக நாங்கள்.

**எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.**

நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Filter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசம்.


021 430 0044 /076 666 5267

YARL SMART (Pvt) Ltd
No.341 K.K.S Road, Jaffna.
yarlsmartwater@gmail.com
www.yarlsmartwater.com




# Yarl Smart PARTY

இல்லங்கள், மண்டபங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளை மனம் போல் மாற்ற...




- Cutting Sticker
- Bithdsy Cakes
- Party Smoke Machine
- Party Bubbles Machine
- Balloon Decoration
- DJ music
- Surprise Gift
- Lighting Decoration
- Artifcial Flowers Decoration

வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களின் விளம்பரங்ளை சிறந்த முறையில் உருவாக்கிட எமை நாடுங்கள்.. அத்துடன் வர்த்தக விளம்பரங்களை தொலைக்காட்சிகள் வானொலிகளில் ஒலி ஒளி பரப்பிட உடன் அழையுங்கள்.

076 624 3205 I 076 919 9989

youtube channel :- smartparty

SMART PARTY
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தீபாவளி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 24
திருநெல்வேலி, சேர்.பொன்.இராமநாதன் வீதியில் இயங்கிவரும் சத்திய சாயி சேவா நிலையத்தில் தீபாவளி நன்னாளான இன்று திங்கட் கிழமை தீபாவளி விசேட பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வு இன்று காலை 6.55 மணியளவில் பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து ஓம்காரம், சாயி காயத்ரி, காயத்ரி மந்திர உச்சாடனத்துடன் தீபமேற்றுதல், விசேட பஜனை என்பன இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் வடபிராந்திய ஆன்மீக இணைப்பாளர் சி.சிவபாலன் தீபாவளி விசேட உரையை நிகழ்த்துவார். (ம-27)



## அரசாங்கத்துக்கு எதிராக யாழில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஒக். 24
நாங்கள் ஒன்று சேர்ந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தலைப்பிலான அரசாங்கத்துக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்தது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் முற்பகல் 10 மணியளவில் தேசிய மக்கள் சக்தியினரால் இந்தப் துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் க.இளங்குமரன், நல்லூர் தொகுதி அமைப்பாளர் கே.சரவணன் உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். (ம-20)

## மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24
நாட்டில் இன்று அவ்வப்போது இலேசான மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

இதன்போது பலத்த காற்றும் வீசக்கூடும். கடற்பரப்பு பிரதேசங்களில் வடமேற்கு அல்லது மேற்கு திசையிலிருந்து மணித்தியாலத்துக்கு 30- 40 கிலோ மீற்றர் வேகத்துக்கு பலத்த காற்று வீசக் கூடும் - என்றுள்ளது. (ம)




## மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் வளமும் கிடைக்கட்டும்

எமது மக்கள் தமது வாழ்வில் பல்வேறு விதமான கஷ்டங்கள், துயரங்களை எதிர்கொண்டு வரும் காலப்பகுதியில், பிறந்திருக்கும் இந்தத் தீபாவளிப் பண்டிகையானது மக்களின் துயர்துடைக் கும் வகையில் அமையவேண்டும்.

இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது இந்துக் குருமார் அமை[illegible] அந்த அமைப்பு[illegible] வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

தமிழ் மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்த திருநாள்களில் தீபாவளிப் பண்டிகை பிரதானமான இடத்தை வகிக்கிறது.

ஒரு தீப ஒளியானது எவ்வாறு இருளை அகற்றுகிறதோ அதுபோலவே இந்தத் தீபாவளியும் எமது மக்கள் வாழ்வில் சகல துயரமும் நீங்கி இன்பமான வாழ்[illegible]மும் பலமும் பெற்று [illegible]வாழ்நிலை அமைத்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்துபிரார்த்தனை செய்து மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிக்கின்றோம்.

இந்தச் சமயத்தில் நாம் இயன்றவரை அதிகரித்த செலவினைத் தவிர்த்து தேவையுடைய மக்களுக்கு இயன்றவரை உதவியுடன் ஆதரவு வழங்குவது நமது கடமையாகவும் தேவையாகவும் உள்ளது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க

நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான முழுநேர விற்பனை முகவர்

**THINKING OF BUYING SELLING OR RENTING**
**HOMES AND LAND IN SRILANKA**



உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX 2018 இருந்து யாழ். மண்ணில்

**HEMAN ANTONY RAJESWARAN**
Real Estate Sales Representative
**+94 740 022 214**

RE/MAX NORTH REALTY +94 77 566 0000 +94 21 468 0780
111C Kannathiddy Rd, Jaffna
www.remaxnorth.lk



அன்பான வாடிக்கையாளருக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

# சசிகா லேணர்ஸ்
## THE SASIKA LEARNERS

HAPPY Deepavali

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு
0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

021 221 7578 / 7678

070 301 3011 / 077 949 5706

கிளைக் காரியாலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி |
| T.P: 021 224 3393 | T.P: 021 225 2333 | T.P: 021 225 1664 | T.P: 021 227 0616 |
| 070 301 3014 | 071 255 4135 | 070 301 3016 | 071 577 0616 |
| 077 343 6622 | 077 434 3798 | 077 434 3149 | 077 435 3995 |
| யாழ் மத்தி (Town) | நெல்லியடி | புன்னாலைக்கட்டுவன் | காரைநகர் |
| T.P: 021 222 8004 | T.P: 021 226 0999 | T.P: 021 224 5001 | T.P: 021 225 2454 |
| 070 301 5004 | 071 775 0999 | 076 384 0684 | 070 510 2484 |
| 070 301 3017 | 077 261 2446 | வேலணை : | |
| 077 998 6247 | | T.P: 021 221 5472, 070 301 3012 | |



எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

HAPPY Deepavali


அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகியதரம் குன்றாத தங்க ஆபரணங்களை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

# ஸ்ரீ குமரன் நகை மாளிகை
## Sree Kumaran Jewellers











74 பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 226 4465
077 873 3482


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏனைய அரசியல்கைதிகளையும் ஜனாதிபதி விடுவிக்க வேண்டும்!

## சிறிநேசன் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 24**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமன்னிப்பின் கீழ் தமிழ் அரசியல்கைதிகள் 8 பேரை விடுவித் தமையை நாம் வரவேற்கின்றோம். அதேபோன்று ஏனைய அரசியல் கைதிகளையும் அவர் விடுவிக்க வேண் டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு மூலமாக தமிழ் அரசியல் கைதிகளான வரதராஜன், ரகுபதி சர்மா, சுதா, நவதீபன், ராகுலன், காந்தன், இலங்கேஷ்வரன், ஜெபநேசன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை விடுவித்த மைக்காக ஜனாதிபதிக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். விடுதலையான அவர்களுக்கு வாழ்வாதார உதவியளிக்க தமிழ் உறவுகள் முன்வரவேண்டும். அதே போன்று ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்ய ஜனாதிபதி முன்வரவேண்டும் - என்றார். (ச-22)

### கௌரிகாப்பு கட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 24

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை கேதார கௌரி விரத பூசைகள் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இடம்பெறவுள்ளது. லட்சார்ச்சனையைத் தொடர்ந்து விரதகாரர்களுக்கு கௌரிகாப்பு கட்டும் நிகழ்வு இடம்பெறும் என ஆலயப் பரிபாலன சபையினரால் அறிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# இளம் தலைமுறையில் எய்ட்ஸ் தீவிரப் பரவல்!

இளம் தலைமுறையினர் மத்தியில் எய்ட்ஸ் தொற்று தீவிரத்தன்மை பெற்றுள்ளது என்று பாலியல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் நோய் தடுப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

இளம் தலைமுறையினரிடத்தில் எய்ட்ஸ் தொற்றின் பரவல் இந்த வருடம் மிகமிக அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் முடிவடைந்த காலப்பகுதியில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான 53 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்கள் 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். இளம் தலைமுறையினர் மத்தியில் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. 2021ஆம் ஆண்டு 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்




பட்டவர்களாக 25 தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டனர். இந்த ஆண்டு இன்னும் முடிவடையாத நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கும் அதிகமாகியுள்ளது. இந்த இளம் தொற்றாளர்களில் ஆண்களே அதிகம். 30 ஆண்கள் - இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகி யுள்ளனர். கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களிலேயே அதிகளவான எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

## காரிருளில் ஒரு விடியல்!

யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற மனிதநேய ஒருமைப் பாட்டை எமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழவைப்பவை பண்டிகைகள். தனிமனித சமூகத்தின் நல்வாழ்வைக் கருதி நம் முன்னோர்களால் மிகுந்த சிந்தனையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களால் பல்வேறு விதமான பண்டிகைகள் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்து சமயம் தன் பண்பாட்டை ஒழுங்குபடுத்த பல்வேறு முறையியல் தன்மைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் பண்டிகைகள் முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வகையில் தீபாவளி பண்டிகையும் சிறப்புப் பெறுகின்றது.



### தீபாவளியின் பொருள்

தீபம் என்றால் 'விளக்கு' 'ஆவளி' என்றால் 'வரிசை' அதாவது தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமான இறைவனை வழிபடும் புண்ணிய தினமே தீபாவளி. ஒரே விளக்கு ஏனைய விளக்குகளை ஒளி வீசச் செய்யும் அந்த முதல் ஒளியே பரமாத்மா. அதனால் ஒளிபெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள். ஜீவராசிகள் எல்லாவற்றுக்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும். இந்த உண்மையை உணர்த்தும் வகையில்தான் ஒளிவிளக்கு திருநாளாக தீபாவளி கொண்டாடப்படுகின் றது.

### தோற்றம்

தீபாவளி பண்டிகையின் தோற்றம் பற்றி இந்துக்கள் மத்தியில் பல்வேறு ஐதீகங்கள் காணப்படுகின்றன. நரகாசுரன் எனும் பழமரபுக் கதையின் அடிப்படையில் தோன்றியது, பிதிர்க்கடன் அடிப்படையில் தோன்றியது, யமனைப் போற்றும் அடிப்படையில் தோன்றியது, பலிச் சக்கரவர்த்தியை போற்றும் வகையில் தோன்றியது, இராமன் அயோத்தி நகருக்குத் திரும்பியமையைப் போற்றும் வகையில் தோன்றியது என்பன அவற்றுள் சில. இவற்றுள் நரகாசுரனை வதைத்த தொன்மைக் கதை பலராலும் ஏற்கப்பட்டிருக்கின்றது. அதுவே தீபாவளியின் தோற்றக்கதையாகப் பார்க்கப்படுகின்றது.

மஹாவிஷ்ணு தனது அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரம் எடுத்தபோது பூமிதேவியை மணந்து பெற்ற பிள்ளையே நரகாசுரன் என்பவனாவான். அவன் கடும் தவத்தினால் பல ஆற்றல்களைப் பெற்றமையினால் அவன் தானே கடவுளிலும் மேலானவன் என்ற மமதை ஏற்பட்டது. இதனால் தேவர்களையும், ரிஷிகளையும் வருத்தினான் நரகாசுரன். இவனின் கொடுமை தாங்க முடியாத தேவர்களும், ரிஷிகளும் தம்மை காத்தருளும்படி மஹாவிஷ்ணுவிடம் வேண்டிநின்றார்கள். தேவர்களின் வேண்டுதலுக்கமைய மஹாவிஷ்ணு கண்ணன் அவதாரம் எடுத்தார். நரகாசுரன் தன் கடும் தவத்தால் இரவிலோ, பகலிலோ தன்னைக் கொல்ல முடியாத இறவாத வரம் வேண்டியிருந்தான். பல மாயை விளையாட்டுக்களின் தலைவனான கண்ணன் இரவும் பகலுமற்ற அந்திசாயும் நேரத்தில் சத்தியபாமாவின் உதவியுடன் அவனை சங்காரம் செய்தார். இவ் நரகாசுரன் வதம் செய்யப்பட்ட நாளே இருள் நீங்கி ஒளிபெற்ற நாளாக எண்ணி தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது.

### சிறப்பு

தீபாவளியன்று நீராடுவதை புனித நீராடல் என்று சொல்லப்படுகின்றது. அன்றைய தினம் அதிகாலையில் எல்லா இடங்களிலும் தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும், அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாகக் கருதப்படுகின்றது. அன்றைய தினம் எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர் நிலைகளிலும் 'கங்காதேவி' வியாபித்து நிற்பதாக ஐதீகம். இந்த நாளில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய புண்ணியத்தையும் திருமகளின் அருளையும் பெறுவர்.

தீபாவளித் திருநாளில் இரவு ஏற்றும் தீப விளக்குகள் இரவு முழுவதும் அணையாது எரிய விடுவர். இதை மாணிக்க தீபம் என அழைப்பர். இவ்வாறு செய்வதன் மூலம் ஸ்ரீ லக் ஷ்மியின் அனுக்கிரகம் கிடைக்கும் என நம்புவதும் இந்து சமய மக்களின் வழக்கமாகும். சமுதாயத்தில் அர்த்தமும் உயிரோட்டமும் உள்ள வாழ்க்கைப்படிமம் என்றும் கூறலாம்.

இந்தப் பண்டிகை தத்துவம் நிறைந்ததாகவும் ஒழுக்கவியல் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்பவையாகவும் உள்ளன. இந்நாளில் பகைவர்களும் தம் கோபங்களை மறந்து சகோதரதத்துவத்துடன் வாழ முனைகின்றனர். அவ்வகையில் இது வெறும் பண்டிகையாக மட்டுமல்லாது வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் இந்தியாவுக்கு முதலீடு



ரஷ்யா தொடுத்த போரில் உக்ரைன் நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யாவும் இதனால் பெரும் பொருளாதார பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்தப் போர் உலகம் முழுவதும் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உலக அளவில் கோதுமை, சோளம், சமையல் எண்ணெய் ஆகிய உணவுப் பொருள் ஏற்றுமதியில் ரஷ்யா மற்றும் உக்ரைன் முக்கியமான பங்கு வகித்து வந்தன. இந்தப் போரினால் இந்த ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. இந்த உணவுப் பொருள் இறக்குமதியை நம்பியிருக்கும் நாடுகள் உணவுத் தட்டுப்பாட்டையும், உணவுப் பொருள் விலையேற்றத்தையும் சந்தித்துள்ளன.

எரிபொருள் விலையேற்றத்திலும் இந்தப் போர் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச அளவில் பணவீக்கத்துக்கும் இது காரணமாக அமைந்தது. ஆசியாவில் இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டன.

**வெற்றிகரமாகக் கையாண்ட இந்தியா**

ஆனால், இந்தியா இதனை வெற்றிகரமாகக் கையாண்டது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தது. இந்தியப் பொருளாதாரம் குறித்து அண்மையில் பேசிய இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இத்தனைப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் 7 சத வீதத்துக்கும் குறைவான பணவீக்கமே ஏற்பட்டது



என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

'பணவீக்கம் ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக இல்லை. உக்ரைன் போர் கண்ணோட்டத்தில் இந்தியாவின் பொருளாதார மீட்சி நிலையானது. ஏற்றுமதிகள் தற்போது மீட்பு நிலையை அடைந்து கொண்டு இருக்கிறது. பெப்ரவரி மாதம் ஏற்றுமதி வளர்ச்சி பரவலாக மாறாமல் இருந்தது. ஒரு வருடத்துக்கு முன்பு இருந்ததைவிட 25.1 சதவீதம் வளர்ச்சியடைந்தது' என்று இந்திய நிதியமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவுகளைச் சந்திக்க உலகத் தலைவர்களுடனான சந்திப்புக்கள், வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள், உறவுகள் முக்கியமானவை. ஆனால், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரச தலைவர்கள் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்கள் விமர்சிக்கப்பட்டன.

**வெளிநாட்டுச் சந்திப்புக்கள்**

குறிப்பாக இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் ஆகியோரின் வெளிநாட்டுப் பயணங்களும் விமர்சிக்கப்பட்டன. ஆனால், இந்தத் தலைவர்களின் இராஜதந்திர சந்திப்புக்கள் அதனால் ஏற்பட்ட, ஏற்படப் போகும் பிரதிபலன்கள் அதிகமாகும்.

இலங்கை ஜனாதிபதி ஜப்பான் சென்றிருந்தபோது, சிங்கப்பூர், ஜப்பான் தலைவர்களைச் சந்தித்து, இலங்கைக்கு சாதகமான பல செய்திகளை எடுத்துவந்திருந்தார். அதேபோல இந்தியப் பிரதமரும் பல இராஜதந்திர சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

ரஷ்ய - உக்ரைன் போரால் மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் குறையும் என்றும், இனி ஆசியா உலகில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்ளும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிலிப்பைஸில் தெரிவித்திருந்தார். இதனை நன்கு அறிந்துவைத்துள்ள இந்தியப் பிரதமர், தனது சர்வதேச ரீதியான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தி வருகிறார். இந்தியப் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள் அதிகம் என்று விமர்ச்சிக்கப்பட்டாலும், இந்தியப் பிரதமரினால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு வருமானம், பலநூறு மடங்கு அதிகம்.

இலங்கை வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியான நேரத்தில் இந்தியா வழங்கிய உதவிகள் இன்றியமையாதது. இந்த நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் திருகோணமலைக்குச் சென்றிருந்த போது இந்தியாவுடனான உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தார்.

**திருகோணமலையும் இந்தியாவும்**

குறிப்பாக இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தியின்போது இந்தியாவை புறந்தள்ளிவிட்டு செயற்பட முடியாது என்பதை சுட்டிக் காட்டியிருந்தார். அதேபோல, திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கியிருந்தால் இன்று எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருந்தார். அன்று எண்ணெய்த் தாங்கிகளை வழங்கியிருந்தால் இன்று அவை காலியாக இருந்திருக்காது. அவை காலியானதால் இன்று வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளும் காலியாகியுள்ளன. இதனால் மக்களின் வயிறுகளும் காலியாகியுள்ளன.

இனிமேலும் திருகோணமலை அபிவிருத்தியின் போது இந்தியாவை விட்டுவிட்டு பயணிக்க முடியாது



என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையின் இந்தியாவின் முதலீடுகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதியின் கருத்துக்கள் பிரதிபலித்தன. இந்த நிலையில்தான், அண்மைக்காலமாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் வடக்கு - கிழக்கு பயணங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஒக்ரோபர் முதல் வாரத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புப் பிரதேசங்களுக்கு பயணித்திருந்தார். அண்மைக்காலமாக இலங்கையின் சக்தித் தேவையை நிவர்த்தி செய்வதில் இந்தியாவின் பங்களிப்பு குறித்தும் தூதுவர் இந்தப் பயணத்தில் பேசியிருந்தார். இந்த நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் திருகோணமலைக்குச் சென்றிருந்த போது இந்தியாவின் முதலீடு குறித்து வலியுறுத்தியிருந்தார்.

**கைகொடுத்த இந்தியா**

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இந்தியா பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது. இந்தியா நேரடியாக இலங்கைக்கு இவ்வருடத்தில் சுமார் மூன்று பில்லியன் டொலர்களை கடனாகவும் பொருளாகவும் வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளுக்குப் பின்னர் 2.9 பில்லியன்களையே இலங்கைக்கு வழங்க கொள்கையளவில் முன்வந்துள்ளது. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகார மட்ட உடன்பாட்டை இலங்கை எட்டியிருந்தாலும், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியுள்ளது. குறிப்பாக கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

பரிஸ் கிளப் நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன. அத்துடன், இலங்கையின் கடன் வழங்குநர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி இலங்கை இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆதரவளிக்கவேண்டுமென்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன. இந்தக் கடன் மறுசீரமைப்புப் பணிகளின்போது, இந்தியா, சீனா, ஜப்பான ஆகிய நாடுகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

**சீனா கழுத்தை நெரிக்கிறதா?**

கடன் வழங்குநர்களுடன் பேசி, கடன்களை மறுசீரமைத்துக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைக்கும். கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ஜப்பான் பச்சைக் கொடி காட்டியுள்ளது. இந்தியாவுடன் இதுகுறித்த முதல்சுற்றுப் பேச்சு நடந்துள்ளது. இந்தப் பேச்சு வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், சீனா எந்தவிதப் பதிலையும் இன்னும் வெளியிடவில்லை. சீனா இங்கு என்ன செய்யப் போகிறது என்பது விடை தெரியாத கேள்வியாகவே இருக்கிறது. நெருக்கடியான நேரத்தில் உதவுவதற்குப் பதிலாக கழுத்தை நெரித்து சீனா குளிர்காய நினைக்கிறதா என்ற பயம் கலந்த கேள்வியும் இலங்கையர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

[redacted] நன்றி - இணைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வட்டு. இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் திறந்தவெளி முத்து அரங்கில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அ.ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் மின்சார நிலைய செயற்பாட்டு பொறியியலாளர் திருமதி ஜென்சி திலீபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களது கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (ச-27)

## இந்தியா – நைஜீரியா; உறவு வலுவாகிறது

இந்தியாவுக்கும் நைஜீரியாவுக்கும் இடையிலான இரண்டாவது சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் புதுடில்லியில் நடைபெற்றன. இதில் இரு தரப்பு பிரதிநிதிகளும் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளை வலுப்படுத்த பல்வேறு வழிகளைத் தொடர்ந்து விவாதித்தனர்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளில் குறிப்பாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்புகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது என்று இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் உத்தியோகபூர்வ செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி தனது தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் அறிக்கையின்படி, நைஜீரியாவின் வெளியுறவு அமைச்சகத்தின் நிரந்தர செயலாளர் கேப்ரியல் அடுடா தலைமையிலான நைஜீரிய தூதுக்குழுவும், வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் தம்மு ரவியும் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

பேச்சு நட்பு மற்றும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதோடு இரு தரப்பும் அடுத்த ஆலோசனைகளை நைஜீரியாவின் அபுஜாவில் பரஸ்பர வசதியான திகதியில் நடத்துவதற்கு இணக்கம் எட்டியுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு பல ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் நைஜீரியாவின் பாதுகாப்புக் கல்லூரியை அமைப்பதற்கு இந்தியா உதவியது.

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் கீழ் திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக, இந்தியா ஆண்டுதோறும் 250 புலமைப்பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

நைஜீரியாவில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் இந்திய முதலீடு சீராக வளர்ந்து வருவதோடு, 2021 - 2022இல் இருதரப்பு வர்த்தகம் 14.95 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இந்தியா 10 பில்லியன் டொலர் அளவுக்கு எண்ணெய் இறக்குமதி செய்ததிருந்தது.

அத்துடன், நைஜீரியர்களுக்கு உயர் கல்வி மற்றும் மருத்துவ சுற்றுலாவுக்கு இந்தியா விரும்பத்தக்க இடமாகும். நைஜீரியாவில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய தொழில் வல்லுநர்கள் பணிபுரிகின்றனர். நைஜீரியாவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். (ஒ-இ)

# கல்விக்கொள்கையை மறுசீரமைக்க பயிற்சி

புதுடில்லி, ஒக். 24

2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலுள்ள அனைத்து பெரியவர்களையும் கல்வியறிவு பெறச்செய்வதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் மூலம் 'புதிய இந்தியாவுக்கான எழுத்தறிவு திட்டம்' ஸ்ரீநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பள்ளத்தாக்கில் உள்ள ஹமிடி காஷ்மீரி நினைவுக் கல்லூரியுடன் இணைந்து, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் இந்த ஐந்து நாள் பயிற்சிப்பட்டறையை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையின்போது, தயாரிக்கப்பட்ட வரைவு ஜம்மு - காஷ்மீர், காஷ்மீரி, உருது, இந்தி மற்றும் டோக்ரி ஆகிய நான்கு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு செயன்முறைச் சாத்தியங்கள் குறித்த ஆராய்வு முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப அமர்வுக்கு காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி அமைப்பின் உருது துறைத் தலைவர் அல்தாப் அஞ்சும் தலைமை வகித்தார்.

ஆரம்ப அமர்வில், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சமன் ஆரா கான், பட்டறையின் நோக்கங்கள் மற்றும் நோக்கங்களை விளக்கினார். அதன்பிறகு அதை தரை மட்டத்தில் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இரண்டாவது அமர்வின் நடவடிக்கைகளில், உருது, இந்தி, காஷ்மீரி மற்றும் டோக்ரி ஆகிய நான்கு மொழிகளின் குழுக்கள் உருவாக்கப்பட்டு, பாடத்திட்டத் தொகுதியைத் தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. (ஒ-இ)

# இந்தியாவுடனான கூட்டாண்மை முன்னேறியது அமெரிக்கா

புதுடில்லி, ஒக். 24

குவாட் மற்றும் ஜி-20 போன்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மூலம் இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடன் தங்கள் கூட்டாண்மையை உயர்த்துவதில் உண்மையான முன்னேற்றம் அடைந்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான கூட்டாண்மை உலகில் மிகவும் ஆழானதாகும். இந்த நிலைமையானது எமது மக்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு உலகளாவிய சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் உள்ளது. குறிப்பாக, சுகாதார பாதுகாப்பு, கால நிலை மாற்றம், உணவு பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான மற்றும் திறந்த சர்வதேச ஒழுங்கை நிலைநிறுத்துதல் ஆகியவற்றுக்கு பெருமளவில் உதவுகின்றது.

அடுத்த ஆண்டு ஜி-20 அமைப்பின் தலைவர் பதவியை இந்தியா ஏற்கவுள்ளதோடு, டிசெம்பரிலிருந்து இந்தியா ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவியை வகிக்கின்றது என்றும் பிளிங்கன் குறிப்பிட்டார்.

முன்னதாக, இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற குவாட் கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அன்ரனி பிளிங்கனை சந்தித்தார்.

இதன்போது குவாட்டின் விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கு நிலைநாட்டப்படுதல் மற்றும் சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக விழுமியங்கள், சர்ச்சைகளுக்கு அமைதியான தீர்வு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றின் கொள்கைகள் மதிக்கப்படும் பிராந்தியத்தைக் கட்டியெழுப்பல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அதீதமான கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில், குவாட் நாடுகள் சந்தித்து, ஐ.நா. சாசனத்துக்கான அசைக்க முடியாத ஆதரவை அடிக்கோடிட்டுக் காட்டியது. ஐ.நா.வின் தூண்களாகச் செயற்பட்டு சர்வதேச அமைப்பை வலுப்படுத்துவதற்கும் சீர்திருத்துவதற்கும் உறுதியான அர்ப்பணிப்பை வலியுறுத்தியிருந்தன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற இடங்களை விரிவுபடுத்துவது உட்பட விரிவான ஐ.நா. சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

கடந்த மேயில் குவாட் தலைவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தோ பசுபிக் பகுதிக்கான 'குவாட்' மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண கூட்டாண்மையை செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களில் கையெழுத்திடுதல் ஆகியன தொடர்பில் தீவிர கரிசனை வெளியிடப்பட்டது. (ஒ-இ)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 . 07 . 1956

உதிர்வு 24 . 10 . 2019

**அமரர் செபமாலை பிரான்சிஸ்**
**(எஸ்.இன்பம்)**
**அந்திய கால சேவை உரிமையாளர்**

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது ஐயாவே
இன்றுடன் மூவாண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

600/04,
மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

குடும்பத்தினர்.
077 711 1474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. குடியுரிமையை துறப்பாராம் பஸில்!!!



கொழும்பு, ஒக். 24

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாள ரான பஸில் ராஜபக்ச, அமெரிக்க குடியுரி மையை துறப்பதற்கு தீர் மானித்துள்ளார் என நம்பகரமான வட்டாரங் களை மேற்கோள்காட்டி சிங்கள இணைய ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அவற்றை உரிய தரப்புக்களிடம் ஒப்ப டைத்த பிறகு பஸில் ராஜபக்ச நாடு திரும்புவார் எனவும் தெரியவருகின்றது.

நாடு திரும்பிய பின்னர் அவர் தீவிர அரசியலில் இறங் குவார் எனவும், நவம்பரில் நடைபெறவுள்ள மொட்டுக் கட்சி மாநாட்டின்போது முக்கியமான சில அறிவிப்புக் களை விடுப்பார் எனவும் அறியமுடிகின்றது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தில் தடை விதிக்கப்பட்டது. எனி னும், பஸிலுக்காக அந்த தடை '20' ஊடாக நீக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்டத்தில் அந்தத்தடை மீளவும் உள்வாங்கப் பட்டுள்ளது. பதவி பறிபோவதற்கு முன்னரே இரட்டைக் குடியுரிமை உடைய பஸில் தனது நாடாளுமன்ற உறுப் பினர் பதவியை இராஜினாமா செய்தார். எனினும், இரட்டைக் குடியுரிமை தடைக்கு மொட்டுக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்ட னர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அமெரிக்கக் குடியுரிமையைத் துறப்பதற்கு பஸில் தீர்மானித்துள் ளார். ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக கோத்தாபய ராஜபக்சவும், இரட்டைக் குடியுரிமையை துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-44)

# அனைத்து ஆணைக்குழுக்களினதும் ஆயுள்காலம் முடிவடைவு!

## நீதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக். 24

22ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற் றப்பட்ட தன் மூலம் தற்போது செயற்படும் அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களின் பத விக்காலம் நிறைவடைந்துள்ளது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரச மைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 வாரங்களுக்குள் அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர்களை நியமிப்ப தற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக் குழு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, தேசிய கொள்வனவு ஆணைக் குழு, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக் குழுக்களே புதிய ஆணையாளர்கள் மற்றும் உறுப் பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (அ-ஒ-இ)

# மொட்டோடு யானை அன்னமாக மாறும்?

கொழும்பு, ஒக். 24

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலுள்ள முக் கியமான சில புள்ளிகள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து புதியதொரு கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன எனத் தெரியவருகின்றது. இதற்கான பேச்சு வெற்றியை நோக்கி நகர்வதாகவும், ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்கவின் மத்தியஸ்தத்துடனேயே பேச்சை தொடர்வதாகவும் சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் நடைபெறுமென எதிர் பார்க்கப்படும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் இந்தக் கூட்டணி போட்டியிடும் எனவும், 'அன்னம்' புதிய கூட்ட ணியின் சின்னமாக அமையும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

கண்டி, கம்பஹா, காலி, பொலனறுவை, பதுளை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளனர்.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் முக்கிய தூண் களில் ஒருவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், விரைவில் தீர்க்கமானதொரு அரசியல் முடிவொன்றை எடுக்கவுள்ளார் என அறியமுடிகின்றது. (அ-ஒ-44)

# நுரைச்சோலையில் திருத்தம் நிறைவு

பராமரிப்புப் பணிகள் காரணமாக நிறுத்தப்பட்ட நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டா வது ஜெனரேட்டர் தேசிய மின்கட்ட மைப்பில் நேற்று இணைக்கப்பட் டுள்ளது.

இந்த ஜெனரேட்டரின் பராமரிப்பு பணிகள் தற்போது நிறைவடைந் துள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் நிஹால் வீரரத்ன தெரிவித்தார்.

அதன்படி, ஜெனரேட்டர் மூலம் உற் பத்திசெய்யப்படும் 270 மெகாவாட்ஸ் மின்சாரம் படிப்படியாக தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும்.

இரண்டாவது ஜெனரேட்டரை தேசிய அமைப்பில் இணைத்த பின் னர், பராமரிப்பு நோக்கங்களுக் காக நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது ஜென ரேட்டரை நிறுத்த திட்டமிடப்பட்டுள்ள தாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-ஒ-இ)

### உயிர்கொல்லி...

வெகுவாக அதிகரித்துள்ளது. இந்தத் துர்ப்பாக்கிய நிலையை இல்லாதொழிப் பதை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தள பதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேய சுந்தர தலைமையில் விசேட படைப் பிரிவானது உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தப் படைப்பிரிவு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக் கள் மேற்கொண்டு அதன் ஊடாக யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல் களைத் தடுத்தல், கைது செய்தல் நடவ டிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்றவற்றை மேற் கொள்ளவுள்ளது.

மேலும் உயிர்கொல்லி போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். பாதுகாப் புப் படைத் தலைமையகத்துக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புக் களையும் பொதுமக்கள் வழங்கவேண்டு மென்று கேட்டுக்கொள்வதுடன் அவை தொடர்பான மேலதிக தகவல்களை பாது காப்பு படைத் தலைமையகம், வசா விளான், யாழ்ப்பாணம் என்ற முகவ ரிக்கோ அல்லது 076 6907751 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### புதிய...

கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப் பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் தற்போது நாட்டின் தலைவர். மக் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்கமுடியாது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டே ஆக வேண்டும்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் தீர்வு காண்பேன்.

இதற்கேற்றவாறு புதிய அரசமைப்பு உரு வாக்கப்படும். அது விரைந்து நிறைவேற் றப்படும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என் பதே எனது நோக்கம்.

தமிழ் மக்களுக்கு மீள்குடியேற்றப் பிரச் சினை, காணிப் பிரச்சினை, காணா மற் போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, அரசியல் தீர்வுப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் உண்டு.

எனக்குள்ள அதிகாரத்தைப் பயன் படுத்தி சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்தப் பணியைத் தற்போது ஆரம்பித்துள்ளேன். அதன் ஒரு கட்ட மாக தண்டனை பெற்று சிறையில் இருந்த அரசியல் கைதிகள் சிலருக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளேன். என்னால் இயன்ற காரியங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பேன்.

அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். இது தொடர்பில் தமிழ்க் கட்சி களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி யும் வருகின்றேன் - என்றார்.

(அ-ஒ-22)

### இனப்பிரச்சினைக்கு...

தீபாவளி தமிழ் மக்களுக்கு முக்கியமான பண்டிகை நாள்.

புதிய அரசமைப்பு ஊடாக தமிழ் மக்க ளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பல வேறு முயற்சிகளை எடுத்து வருகின் றோம். வழமைபோல் இலங்கை அரசு, இந்தக் கருமத்தைச் செய்யாமல் இழுத் தடிக்க முடியாது.

கடந்த காலக் கசப்பான சம்பவங்களால் நாங்கள் விரக்தி நிலையில் இருக்கின் றோம். எனவே, தீர்வு விடயத்தில் இலங்கை அரசு அசண்டையீனமாகச் செயற்பட்டால் தமிழ் மக்களின் நலன் கருதி நாங்கள் தீர்க்கமான முடிவை எடுப்போம்.

சர்வதேச சமூகத்தை இந்தக் கருமத்தில் நேரடியாகப் பங்கெடுக்கச் செய்து தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழிவகுக்குமாறு நாங்கள் கோருவோம்.

இலங்கையின் ஆட்சியில் எவர் இருந் தாலும் எம்மை இனிமேல் ஏமாற்றவே முடியாது - என்றார். (அ-ஒ-5-22)

### போதைப்பொருள்...

எங்கள் சமுதாயத்தை ஆட்கொண்டிருக் கும் பெரும் தீமையாகிய உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு எதிராக அனை வரும் செயற்படவேண்டும். அதற்கு எதி ராக பாடுபடுபவர்களுக்காக நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

இன்னமும் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கும் அதனைக் கடத்துவதற்கும் பலரும் ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்தத் தீய செயற்பாட்டில் இருந்து அனைவரும் விலக வேண்டுமென்று மன்றாட்டமாகக் கோருகின்றோம். இவ்வாறான தீய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகப் பாதுகாப்புத் தரப்பினரும் சிவில் உத்தியோகத்தர்களும் உரிய நட வடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு உயிர்கொல்லிப் போதைப் பொருளால் பாதிக்கப்படுகின்ற பிள்ளை களை பெற்றோர் இனங்கண்டு உடன டியாக சமூகத்துடன் மீளிணைக்கும் சிகிச் சையை வழங்கவேண்டும் - என் றார். (அ-ஒ-20)

### போதைக்கு...

அவர் கடந்த ஒரு மாத காலமாக உயிர் கொல்லி ஹெரோய்னை நுகர முடியா மல் இருந்துள்ளார். இந்த நிலையில் நேற்றைய தினம் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாதாந்தம் ஒருவராவது இவ்வாறு உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனையிலிருந்து மீள் வதற்கு முயற்சிப்பவர்கள் உரிய மருத் துவ ஆலோசனையுடனேயே அதனை முன்னெடுக்கவேண்டுமென்று மருத்து வர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

(அ-ஒ-5-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கையாளருக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தில் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

- பான்ஸிப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- கிளாஸ் வகைகள்
- மாபிள் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாதணி வகைகள்
- முகக் கவசங்கள் (Mask)
- அன்பளிப்புப் பொருட்கள்
- மணிக்கூடுகள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலை பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்




## சரவணபவன் பான்ஸி ஹவுஸ்

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்
(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354


# அமெரிக்காவில் நடந்த இலங்கை அழகிப்போட்டியில் அடிதடி



நியூயோர்க், ஒக். 24

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடத்தப்பட்ட மிஸ் சிறிலங்கன் அழகிப்போட்டியின் இடையில் மோதல் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. அது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இந்த அழகிப்போட்டியில் 14 போட்டியாளர்கள் கலந்துகொண்டதுடன் 300க்கும் மேற்பட்டோர் பார்வையாளர்கள் கலந்துகொண்டுள்ளனர். மிஸ் சிறிலங்கா நியூயோர்க் அழகியாக ஏஞ்சலியா குணசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் இந்த போட்டியின் பின்னர் நடந்த விருந்துக்கு பிறகு இருத்தரப்புக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. எனினும் அந்த மோதலுக்கான காரணங்கள் வெளியாக வில்லை. (ஏ-இ)


## காணி விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் சாயி கோயிலுக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
077 60 111 35

## ஹஜஸ் வான் விற்பனைக்கு

250- xxxx இலக்கத்தை உடைய ஹஜஸ் வான் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 592 5450

## மணமகள் தேவை

1989 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7 இல் செவ்வாய், லண்டன் PR உள்ள மணமகனுக்கு ஓரளவு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.
075 510 3630

அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## மலேசியா இலவச வேலை வாய்ப்பு

1. வீட்டு பணிப்பெண்கள் ( house maid) 2. பராமரிப்பாளர்கள் (care taker)
● சம்பளம் = 1500 மலேசியா றிங்கிட் ● வயது 23-49
இலவச உணவு, தங்குமிடம் மருத்துவம். மாதத்தில் 26 நாட்கள் 12 மணித்தியாலங்கள் வேலை. வார இறுதி நாட்களில் வேலை செய்தால் மணிக்கு 10 மலேசியா வெள்ளி மற்றும் over time வழங்கப்படும்.
தெற்கு ஐரோப்பிய நாடாகிய அல்பேனியா வில் தொழில் வாய்ப்பு
1. couple visa (கணவன் மனைவி விசா )
Factory helpers
அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மிக குறைந்த கட்டணம். சம்பளம் 700 அமெரிக்க டொலர். ஒரு வருடத்தில் பிற ஐரோப்பிய நாடுகளில் தொழில் வாய்ப்பு.
தொடர்பு: 077 722 8231

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு

✓ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
✓யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
✓2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
✓யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
✓பார்வையிடும் நேரம்:
காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.